# Indian Polity Notes Part 21 in Tamil

## 21. ஆட்சிமொழி (Official Language)

**(பகுதி – XVII)**

**மத்திய ஆட்சி மொழி(சரத்து-343)**

- மத்திய அரசின் அலுவலக / ஆட்சி மொழி தேவநாகரி எழுத்துருவிலுள்ள இந்தி ஆக இருத்தல் வேண்டும்.
- அலுவலக பயன்பாட்டிற்கான எண்ணுரு “பன்னாட்டு வடிவ இந்திய எண்களில்” இருக்க வேண்டும்.
- அரசியலமைப்பு தொடங்கிய 15 ஆண்டுகளுக்கு ஆங்கில மொழி அலுவல் முறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம்.

**அலுவலக மொழிக்கான ஆணையம் மற்றும் குழு (சரத்து - 344)**

- அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து 5 ஆண்டுகளுக்குள்ளாக பிறகு ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் குடியரசுத் தலைவர் மொழி ஆணையத்தை நியமிக்க வேண்டும்.
- இந்த ஆணையத்தின் ஒரு தலைவர், எட்டாவது அட்டவணையில் உள்ள மொழிகளை பிரதிநிதிப்படுத்தும் உறுப்பினர்களை குடியாசுத் தலைவர் நியமிப்பார்.

**ஆணையத்தின் பணிகள்:**

பின்வரும் பரிந்துரைகளை குடியரசுத் தலைவருக்கு கொடுக்கும்.

- மத்திய அரசு அலுவல் மொழியாக ஹிந்தி பயன்படுத்துதல்.
- ஆங்கிலத்தை பயன்படுத்த கட்டுப்பாடுகளை விதித்தல்
- உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் மொழிகள் தொடர்பாக குறிப்பிடுதல்
- மத்தியில் எண்ணுரு பயன்படுத்துதல் தொடர்பாக
- மத்திய அரசின் அலுவலக மொழி மற்றும் மாநில மத்திய அரசுகளுக்கிடையேயான தொடர்பு மொழி, மாநிலங்களுக்கிடையேயான தொடர்பு மொழி தொடர்பாக குடியரசுத் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள்.

**மொழிக்குழு:**

மொத்த உறுப்பினர்கள் 30 பேர். அவர்களில் 20 உறுப்பினர்கள் மக்களவையிலிருந்து மக்களவை உறுப்பினர்களாலும், 10 உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர்களாலும் ஒற்றை மாற்று விகிதாச்சார முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**மாநில ஆட்சிமொழி (சரத்து-345)**

மாநில ஆட்சிமொழியாக அம்மாநிலத்தில் பயன்படுத்தப்படும் மொழிகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அல்லது ஹிந்தியினை சட்டமன்ற சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளலாம்.

இரண்டு மாநிலங்கள் தங்கள் தொடர்புக்காக ஹிந்தி மொழியை ஏற்று உடன்பாடு கொள்கின்றன என்றால் அம்மொழியினை பயன்படுத்தலாம்.(சரத்து - 346)

**உச்சநீதிமன்ற, உயர் நீதிமன்ற மொழிகள் (சரத்து - 348)**

உச்சநீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும், நாடாளுமன்றத்தில் அல்லது சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் அனைத்து மசோதாக்களும், சட்டங்களும், அனைத்து உத்தரவுகளும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.

மாநிலத்தின் மாநில மொழியினைப் பயன்படுத்த ஆளுநர் அதிகாரமளிக்கலாம்.

**சரத்து - 350 B**

சிறுபான்மை ஒழியினருக்காக தனி அலுவலர் (Special Officer for linguistic minorities) ஒருவரை குடியரசுத் தலைவர் நியமித்தல் வேண்டும். (1956 ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 7 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால் புதிதாக சேர்க்கப்பட்டது)